# இயேசுவை தங்கள் இல்லத்தில் ஆராதித்த ஒரு குடும்பம்

பிள்ளைகளுக்கான இந்த செயல்பாடுகளில் எதையாவது தேர்வு செய்யவும்.

**ஜெபம்:** அன்பான கர்த்தாவே, தங்கள் வீடுகளில் விசுவாசிகளை சேர்க்கவும், அவர்களுக்கு இயேசுவைப் பற்றி கூறவும், ஆராதிக்கவும் உதவி செய்வீராக. ஒரு பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர் பிலிப்பிய சிறையதிகாரி பற்றிய கதையை அப்.16:22-36 லிருந்து வாசிக்கவோ அல்லது மனப்பாடமாகவோ கூறவும்.



கதையைக் கூறிய பின் இந்தக் கேள்விகளைக் கேட்கவும் *(கேள்விக்குப் பின்னால் பதில் தரப்பட்டுள்ளது)*

- அதிகாரிகள் பவுலையும் சிலோவையும் எவ்வாறு நடத்தினர்? *(வச.23-24)*
- நடு இரவில் பவுலும் சீலோவும் சிறைச் சாலைக்குள் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? *(வச.25)*
- சிறைச்சாலைக்காரன் ஏன் தன்னையே மாய்க்க விரும்பினான்? *(வச.26-27)*
- சிறைச்சாலைக்காரன் தனக்கும் தன் குடும்பத்துக்கும் எவ்வாறு இரட்சிப்பைக் கண்டடைந்தான்? *(வச.31)*
- இரவில் எத்தனை மணிக்கு சிறையதிகாரியும் அவனது குடும்பமும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் *(வச.25, 32-34)*
- சிறையதிகாரியும் அவனது குடும்பமும் பற்றிய கதையின் பகுதிகளை நாடகமாக்குக.
- ஆராதனைத் தலைவருடன் பேசி குழந்தைகள் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க.
- உங்கள் நேரத்தை செலவிட்டு குழந்தைகள் நாடகத்தை தயாரிக்க உதவுங்கள். எல்லா பகுதியையும் உபயோகிக்க தேவை இல்லை?
- **பெரிய பிள்ளைகள்** இதை தயாரிக்க சிறு பிள்ளைகளுக்கு உதவவும்.

பெரிய பிள்ளைகளோ பெரியவர்களோ நடிக்க வேண்டிய பாகங்கள்:

**பவுல்**

**சிறையதிகாரி:** சங்கிலிக்குப் பதிலாக ஒரு கயிறும், வாளைக் குறிக்க எதையாவது தேர்ந்து கொள்ளவும்.

**கதை கூறுபவர்:** கதைச் சுருக்கத்தைக் கூறவும். ஒரு மேசையின் ஓரத்தில் கற்களையோ, புத்தகங்களையோ, குவித்துவைக்கவும்.

- **சிறிய பிள்ளைகள், சீலோ, அதிகாரி, கைதிகள், சிறையதிகாரியின் குடும்பம்** ஆகிய வேடங்களை எற்கலாம்.
- **கதைகூறுபவர்:** அப்.16:22-28 லிருந்து கதையின் முதல் பகுதியைக் கூறி பின், “அதிகாரி என்ன கூறுகிறார் என்பதைக் கேளுங்கள்”
- **அதிகாரி:** “சிறைச்சாலையின் காவலரே! பவுலையும் சீலாவையும் சிறையில் போடும். நன்றாக அடித்து, கவனமாகக் காவலில் வையும்.”

**சிறைச்சாலைக்காரன்:** (அவர்களது கரங்களை சங்கிலியில் பிணைக்கிறான் (முடிச்சி போட வேண்டாம்) பின் கூறுகிறான். “நான் இவர்களை உள் அறையில் சங்கிலியால் கட்டி, உயிர் போல காப்பேன்.”

**பவுலும் சீலாவும்:** (ஒரு மேசையின் கீழ் அமர்ந்து ஒரு பாடலைப் பாடுகின்றனர்).

**சிறைச்சாலைக்காரன்:** ஓ! நிலநடுக்கம்! (மேசையை ஆட்ட, கற்களோ புத்தகமோ கீழே விழுகிறது).

**பவுலும் சீலாவும்:** சங்கிலியை எடுத்துப் போட்டு விட்டு எழுகின்றனர்.

**கைதிகள் :** நாம் விடுதலை ஆகிவிட்டோம்! கதவுகள் திறந்து கிடக்கின்றன.

**சிறைச்சாலைக்காரன்:** (வாளை ஓங்கி) ஐயோ! கைதிகள் தப்பி ஒடி விட்டனரே! நான் சாகவேண்டும்!

**பவுல்** : (சத்தம்போட்டு) ஐயா! உங்களை நீங்களே கொல்ல வேண்டாம்! நாங்கள் இங்கே இருக்கிறோம்.

**கதைகூறுபவர்:** அப்.16:29-33லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். பின் சொல்ல வேண்டியது, “சிறைச்சாலைக்காரன் கூறுவதைக் கேளுங்கள்.”

**சிறைச்சாலைக்காரன்:** யாரங்கே! ஒரு விளக்கைக் கொண்டு வா! நான் பவுலையும் சீலாவையும் பார்க்க வேண்டும். (பின் பவுலுக்கும் சீலாவுக்கும் முன் முழங்காலிட்டு சத்தமாக கேட்கிறான்) “இரட்சிப்படைய நான் என்ன செய்ய வேண்டும்?”

**பவுல்** : இயேசு கிறிஸ்துவை நீர் விசுவாசித்தால் நீரும் உமது குடும்பமும் இரட்சிக்கப் படுவீர்கள்.

**சிறைச்சாலைக்காரனின் குடும்பம்:** நாங்களும் இயேசுவை விசுவாசிக்க விரும்புகிறோம்.

**சிறைச்சாலைக்காரன்:** நான் உங்களது காயங்களைக் கழுவுகிறேன். அதன் பின் இன்று இரவு நாங்கள் யாவரும் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்வோம்.

**கதைகூறுபவர்** : அப்:16:34-36 லிருந்து கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும் பின் “பவுலிடமும் சீலாவிடமும் சிறைச்சாலைக்காரன் கூறுவதைக் கேளுங்கள்”.

**சிறைச்சாலைக்காரன்:** நான் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறேன். ஏனெனில் என்னுடைய முழுக்குடும்பமும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது. வாங்க. என் வீட்டில் உங்களுக்காக உணவு ஆயத்தமாய் இருக்கிறது.

**அதிகாரி** : (மேசையைக் கொட்டி) சிறை அதிகாரியே! வணக்கம். நீர் பவுலையும் சீலாவையும் விடுதலை செய்துவிடலாம்.


**சிறைச்சாலைக்காரன்:** சகோதரர்களே. இயேசுவைப் பற்றிய நற்செய்தியை என் குடும்பத்துக்குக் கொண்டு வந்ததற்காய் நன்றி. சமாதானத்தோடு போங்க.

கதைகூறுபவர் அல்லது ஒரு பெரிய பிள்ளை: நாடகம் முடிந்த உடன் யாவருக்கும் நன்றி சொல்லவும்.

**கேள்விகள்:** இந்த நாடகத்தைப் பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடத்திக்காட்டினால் மேலே உள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**குழந்தைகளைக் கேட்க வேண்டியது:** நமது வீடுகளில் தேவனை ஆராதிக்கவும் சேவை செய்யவும் உதாரணமான வழிகள் எவை?

**படம்:** உங்கள் ஊரில் காணப்படும் வீடுகளின் ஓர் எளிய மாதிரியை வரையவும். பிள்ளைகள் அதைப்பார்த்து வரைவார்களாக பின் ஆராதனை நேரத்தில் பெரியவர்களிடம் காட்டி நாம் தேவனை வீடுகளிலும் மற்றும் எங்கும் ஆராதிக்கலாம் என்பதை விளக்கவும்.



யோவான் 4:24 ஐ மனப்பாடம் செய்க.

**சங்கீதம்:** சங்.13:1-6 ஐ மூன்று சிறுவர்கள் தலைக்கு இரண்டாக ஒப்புவிக்கவும். ஒவ்வொரு வசனம் முடிந்த பின்னும், "அவர் கிருபை என்றும் உள்ளது" என்று அனைவரும் கூறுக.

வீடுகளில் ஆராதனை செய்ய கூடுவது பற்றி பெரிய பிள்ளைகள் கவிதையோ பாடலோ எழுதலாம்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே. உம்மை நாங்கள் எங்கும் எப்போதும் ஆராதிக்க முடிவதால் நன்றி செலுத்துகிறோம். நாங்கள் மிகவும் சிறிய குழுவாக இருப்பதால் ஒன்றுமில்லை. எங்களது முழுக்குடும்பத்தையும் உம்மிடமாகக் கொண்டு வந்ததற்காய் நன்றி. உம்மை முழுமனதோடு ஆராதிக்க எங்களுக்கு உதவி செய்யும்."

**நீங்கள் குழந்தைகளுக்கு போதிப்பவரா? ப.தீ. பாடமான A0b சிறுவர்களுக்கான ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்கள் என்பதை இன்னும் படிக்க வில்லை என்றால் உடனே படிக்கவும்**

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net